# பிரதோஷ விரதத்தின் மகிமை

# GLORY OF PIRATHOSHA VIRATHAM



## OTTAWA SIVAN TEMPLE

## ஒட்டாவா சிவன் கோயில்

# வேண்டுதல் - Request

**சிவனடியார்களே,**

சிவ விரதங்களுள் மிக முக்கியமானது பிரதோஷ விரதமாகும். இவ்விரதத்தை அனுட்டித்து பிள்ளைப் பலன் பெற்றவர்களும், நோயற்ற வாழ்வும், குறையாத செல்வமும் கிடைக்கப் பெற்றவர்கள் அனேகர். இது இலகுவாக அனுட்டிக்கக்கூடிய விரதமாகும். மாதம் இரு நாட்கள் வரும் பிரதோஷ நாட்களில் சிவபெருமான் நினைவோடு விரதமிருந்து மாலை 5.30 மணிக்குக் கோயிலுக்கு வந்து நடைபெறும் பிரதோஷ அபிஷேக பூசைகளில் பங்கு பற்றி அன்னதானத்தில் உண்டு விரதத்தை முடித்துக் கொள்ளலாம். பிரதோஷ விரதத்தை ஆரம்பிக்க விரும்புவோர் ஒரு சனிப் பிரதோஷத்தில் தொடங்குவது நன்மை பயக்கும்.

தயைகூர்ந்து ஒட்டாவா சிவன் கோயில் பணிமனையில் தங்கள் பெயரையும் குடும்பத்தினர் பெயர் நட்சத்திரங்களையும் பதிவு செய்யுங்கள். அப்போது தங்களால் கோயிலுக்கு வரமுடியாத நாட்களிலும் பதிவுசெய்த பெயர் நட்சத்திரங்களுக்கு சிவன், சக்திக்கும், நந்திதேவருக்கும் அரச்சனை நடைபெறும்.

## Dear Devotees,

Pirathosha Viratham is an important viratham among all other Siva Virathams. By observing Pirathosha Viratham, devotees are blessed with children, healthy and wealthy life. Pirathosha viratham can be easily observed. Prathosham occur twice a month. On the Pirathosha day, devotees observe this Viratham by thinking and praying Lord Siva though out the day, visit temple by around 5.30PM, participate in Prathosha Abisheka Pooja and end the Viratham by consuming in ‘Annathaanam’ given in Temple. Those who like to observe Prathosha viratham for the first time, are advised to start on a Saturday Pirathosham for good results.

Kindly register your family members’ names and Nakshatrams at Ottawa Sivan Temple office. Then, Archanai for your family to Siva-Sakthi and Nanthidevar during Prathosham shall be done even on the days you are unable to visit the Temple.

உ

சிவமயம்

# பிரதோஷ விரதத்தின் மகிமை

# GLORY OF PIRATHOSHA VIRATHAM

## வெளியிடுவோர்: சைவநெறி மன்றம்

## Released By: Saivaneri Manram

## Ottawa Sivan Temple

**<u>பொருளடக்கம் : Contents</u>**

வேண்டுதல் – Request (2)
பிரதோஷ விரதம் – அறிமுகம் (4)
பிதோஷ விரதம் தோன்றிய கதை (5)
பிரதட்சணம் செய்யும் முறை (6)
லிங்காஷ்டகம் (8)
லிங்காஷ்டகம் – தமிழ் (10)
நந்திதேவர் துதி (12)
சிவபுராணம் (15)
History of Prathosha Viratham (19)
Method of Pirathadchanam (6)
Lingashtagam (21)
Meaning of Lingashtagam (20)
Nanthi Thevar Thuthi (24)
Sivapuranam (27)
Pradosha Vrata - By Sri Swami Sivananda (31)

**First Print: August 2012**
**Second Print: August 2016**

# பிரதோஷ விரதம் - அறிமுகம்

சைவ மக்களால் கடைப்பிடிக்கப்படும் சிவ ஒன்று பிரதோஷ விரதமாகும். இது ஒவ்வொரு மாதமும் வளர்பிறை தேய்பிறை ஆகிய இரண்டு பட்சங்களிலும் வருகின்ற திரயோதசித் திதியில் சூரியன் மறைவதற்கு முன் மூன்றேகால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாழிகையும் உள்ள பிரதோஷ காலத்தில் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கப்படும் விரதமாகும்.

இவ்விரதத்தை நோற்க விரும்புவர்கள் சித்திரை வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் வரும் சனிப்பிரதோச நாளில் விரத அனுட்டானத்தை தொடங்குதல் மரபு. பிரதோஷம் என்னும் இவ்விரதம் சிவமூர்த்திக்கு உரிய விரதங்களில் தலையாயது.

பிரதோஷ காலம் தினமும் சூரியன் மறைவதற்கு முன் மூன்றேகால் நாழிகையும், மறைந்த பிறகு மூன்றேகால் நாழிகையும் என மொத்தம் ஏழரை நாழிகை (3 மணி நேரம்) ஆகும். பிரதோஷ காலத்தில் ஈஸ்வரன் தன்னுள் எல்லாவற்றையும் ஒடுக்கிக் கொள்கிறார்.

11ம் பிறையாகிய ஏகாதசியில் அவர் விஷம் உண்டார். 12ம் பிறையாகிய துவாதசியில் காட்சி தந்தார். 13ம் பிறையாகிய திரயோதசி மாலை பிரதோஷ காலத்தில் நடன தரிசனம் தந்தார். சிவபெருமான் விஷம் உண்ட நாள் சனிக்கிழமையாகும். எனவே சனிப்பிரதோஷம் மகத்தான சிறப்பு வாய்ந்தது.

சிவனை வழிபட ஏற்ற காலம் சாயரட்சை. அதிலும் சிறந்தது சோமவாரம். அதனிலும் சிறந்தது பிரதோஷம். சோமவாரம் எனப்படும் திங்கள்கிழமையன்று பிரதோஷ தரிசனம் செய்பவர்களளெல்லா தேவர்களையும் தரிசித்த புண்ணியத்தை பெறுகிறார்கள். தரித்திரம் ஒழியவும், நோய் தீரவும், கெட்ட நோய்களின் துயர் மடியவும் பிரதோஷ வழிபாடு சிறந்ததாகும்.

# பிரதோஷ விரதம் தோன்றிய கதை:

சாகா வரம் பெறுவாதற்காக அமிர்தம் வேண்டி தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தபோது வலி தாங்காத வாசுகி பாம்பு விஷத்தை கக்கியது. அச்சமயத்தில், கடலில் இருந்தும் விஷம் பொங்கியது. இப்படி பாம்பினால் கக்கப்பட்ட 'காலம்' என்ற நீல விஷமும், பாற்கடலில் பிறந்த 'ஆலம்' என்கிற கருப்பு விஷமும் சேர்ந்துகருப்புப் புயல் போல் கொடிய வெப்பமும். கடும் புகையும் கொண்டதாக மாறி உலகை வருத்தத் தொடங்கியது.

விஷத்தைக் கண்டு பயந்த தேவர்கள் கயிலாயம் சென்று ஈசனிடம் முறையிட்டனர். அப்பொழுது ஈசன், ‘சுந்தரர்’ என்னும் தொண்டரை அனுப்பி “அவ் விஷத்தை இவ்விடம் கொண்டுவா!” என்று பணித்தார். சிவபெருமான் கட்டளைப்படி சுந்தரரும், கொடிய ஆலகால விஷத்தை ஒரு துளியாகக் கொண்டு வந்தார்.

அந்த ஆலகால விஷத்தை ஒரு கணநேரத்தில் உட்கொண்டார் சிவபெருமான். இதனால் ஈரேழு உலகிற்கும் பாதிப்பு வரும் என்று கருதிய பார்வதி, விஷம் முழுவதும் சிவனின் கழுத்திலேயே தங்குமாறு செய்தாள். அன்றுமுதல் ஈசன் “திருநீலகண்டர்” என்றழைக்கப்பட்டார். விஷம் கொண்டுவந்த சுந்தரர் “ஆலால சுந்தரர்” என்று அழைக்கப்பட்டார்.

தேவரும் அசுரரும் திரியோதசி தினத்தில் சிவனை அலட்சியம் செய்தமைக்காக வருந்தி தம் பிழையை உணர்ந்து அவரைத் துதித்து தம் பிழைகளை ஆண்டவன் பொறுத்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்த போது சிவபெருமானும் மனம் கனிந்து அவர்களை மன்னித்து அவர்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்த நந்தியின் கொம்புகளுக்கிடையில் நடனமாடினார்.

இந்த மகிழ்ச்சியான நேரமே பிரதோஷம் எனப்படும். வைத்தியநாதப் பெருமானும் தையல்நாயகியும் மகிழ்ச்சியாக இருக்கும் ப்ரதோஷ காலத்தில் வணங்கி வந்தால் உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

## சிவபெருமானைப் பிரதட்சணம் செய்யும் முறை:

சிவாலயத்தில் நந்தி பெருமானிடமிருந்து புறப்பட்டு, வலப்புறமாகச் சென்று சண்டிகேசுவரரை வணங்கி, அங்கிருந்து வந்த வழியே திரும்பி வந்து, நந்திதேவரை வணங்கி, இடப்புறமாக கோமுகி வரை வந்து, மீண்டும் வந்த வழியே திரும்பி நந்திதேவரின் கொம்புகளுக்கிடையே சிவபெருமானை வணங்க வேண்டும்.


இப்படி மூன்று முறை வணங்கும் முறைக்கு சோம சூக்த பிரதட்சணம் என்று பெயர்.

## Unique way of Circumbulating Lord Siva:

**Somasuktha Pradakshnam** is a unique way of circumambulating the GOD. Beginning, First saluting the Rishabha Devar (Holy Bull or Nandi) go anti-clockwise and salute Chandishwarar (not crossing the Gomukhi). Now return in the clockwise manner salute Rishabham and continue clockwise till the Gomukhi (not to cross it again). Then return in anti-clockwise direction salute the Rishabham again and proceed towards chaNdIshar. From there return back clockwise worship the shiva lingam (at the altar) by viewing through the space between the two horns of the Holy Bull. This is one Pradakshinam.

Three such times Pradakshinam to be done. If you carefully observe the curve traced by doing the pradakshinam is very similar to the periphery of the crescent. Hence this way of circumambulating is called **Somasuktha Pradakshinam.**

# சோம சூக்த பிரதட்சணம்
# SOMA SUKTHA PRATHADCHANAM




(1) **Komuki – Holy Water : கோமுகி – தீர்த்தம்**
(2) **Sandeswarar – சண்டேஸ்வரர்**

**Pradhadchanam Begins** – பிரதட்சணம் ஆரம்பம்

**Pradhadchanam Ends** – பிரதட்சணம் முடிவு

பிரதோஷ பூசையின் போது விரதம் அனுட்டிப்பவர்கள் ஐயரிடம் 'அட்சதை' பெற்று படத்தில் காட்டியபடி மூன்று முறைகள் சிவனையும் இடபதேவரையும் வலம் வந்து அட்சதையை இடபதேவர் கால்களில் அர்ப்பணித்து அவர் காதில் தங்கள் விருப்பத்தை அல்லது வேண்டுகோளைக் கூறி (விக்கிரகத்தில் தொடாமல்) வணங்குவர்.

During Prathosha Pooja those who are observing the Viratham shall obtain 'Adchathai' from Iar and circumbulate Sivan & Idabathevar as shown in the picture THREE times. At the end of 3rd round they offer the Adchacthai at the feet of Idapathevar and state their desire/request in the ear of Idapathevar (without touching the Vikraham) and pray.

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ து:க வினாசக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (1)

தேவமுனி ப்ரவரார்சித லிங்கம்
காமதஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (2)

சர்வ ஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (3)

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (4)

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (5)

## லிங்காஷ்டகம் (தொடர்ச்சி)

தேவகணார்சித ஸேவித லிங்கம்
பாவை-ர்பக்தி பிரேவ ச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (6)

அஷ்டதளோபரிவேஷ்டித லிங்கம்
ஸர்வஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (7)

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (8)

லிங்காஷ்டகமிதம் புண்யம்
ய:. படேச்சிவ ஸன்னிதௌ
சிவலோக மவாப்னோதி
சிவேன ஸஹ மோததே

சிவாய நம ஓம் சிவாய நமஹ
சிவாய நம ஓம் நமச்சிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம
ஹர ஹர ஹர ஹர நமச்சிவாய!

# லிங்காஷ்டகம் - தமிழ்

பிரம்ம முராரியர் போற்றிடும் லிங்கம்
சிறிதும் களங்கம் இல்லா சிவலிங்கம்
பிறவியின் துயரை போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [1]

தேவரும் முனிவரும் போற்றிடும் லிங்கம்
காமனை எரித்த கருணா லிங்கம்
ராவணன் உள்ளம் விளங்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [2]

வாசமனைத்தையும் பூசிய லிங்கம்
வளர் அறிவாகிய காரண லிங்கம்
சித்த சுராசுரர் போற்றிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [3]

பொன்மணிசூடி சுடர்ந்திடும் லிங்கம்
தன்னிடை நாகம் அணிந்திடும் லிங்கம்
தக்ஷனின் யாகம் வீழ்த்திய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [4]

குங்குமம் சந்தனம் பூசிய லிங்கம்
பங்கஜ மாலையை சூடிய லிங்கம்
தொங்கிய வினைகளை போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [5]

## லிங்காஷ்டகம் – தமிழ் (தொடர்ச்சி)

தேவர் கணங்களின் அர்ச்சனை லிங்கம்
தேடிடும் பக்தியில் ஊறிடும் லிங்கம்
சூரியன் போல சுடர்விடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [6]

எட்டு களத்தினில் எழுந்திடும் லிங்கம்
எல்லா மாகிய காரண லிங்கம்
எட்டு தரித்திரம் நீக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [7]

தேவரின் உருவின் பூஜைக்கு லிங்கம்
தேவ வண மலரை ஏற்றிடும் லிங்கம்
பரமனை அதனாய் பரவிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்! [8]

லிங்காஷ்டகம் மிதை தினமும்
சிவசன்னிதியில் சொல்வாய்
சிவலோக காட்சியுடன்
சிவன் அருளும் கொள்வாய்!

சிவாய நம ஓம் சிவாய நமஹ
சிவாய நம ஓம் நமச்சிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
ஹர ஹர ஹர ஹர நமச்சிவாய



## நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிப்பட்டால்
புந்தியில் ஞானம் சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழ உண்டு!
அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாட உண்டு!
முற்பிறவி வினைகள்யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலங்கள்உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோமே!

## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கைலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி

வேந்தன் நகர் செய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி.

# நலந்தரும் நந்தி

**கந்தனின்** தந்தையைத் தான்
கவனமாய்ச் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு
நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி
அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன்
நாடி வந்தெம்மைக் காப்பாய்
ஒன்பது கோள்களுக்கும்
உயரிய பலன் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய்
புகழையும் வளர்த்து வைப்பாய்

**சிந்தனை** வளங்கொடுப்பாய்
சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன்
நாடிவந்தெம்மைக் காப்பாய்
மாலைகள் ஏற்க வைப்பாய்
மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்க வைப்பாய்
விதியையும் மாற்றி வைப்பாய்

**சோலையின்** வண்ணப்பூவைச்
சூடிடும் நந்தி தேவா
நாளும் நான் உனைத் துதித்தேன்
நாடி வந்தெம்மைக்காப்பாய்
தஞ்சையில் பெரிய நந்தி
தளிருடல் வெண்ணை சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி
அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை
குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாம் உனையடைந்தேன்
தயங்காது எம்மைக் காப்பாய்

# சிவபுராணம்

**தொல்லை யிரும் பிறவி சூழும் தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்**
**திருவாசக மென்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி

விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே

ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**தொல்லை யிரும் பிறவி சூழும் தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்**
**திருவாசக மென்னும் தேன்.**

**திருச்சிற்றம்பலம்.**

# History of Pradosha Vratham or

# Why Observing Pradosham

According to Hindu Puranas, the gods (Devas) and the demons (Asuras) were stirring the milky ocean to extract amritam (nectar), with Vasuki (the serpent king) as a rope. As Vasuki underwent severe scratches due to the churning, she emitted a powerful poison which is capable of destroying the world. The helpless celestials pleaded Lord Shiva to save them. In order to save them, Lord Shiva swallowed the poison. Goddess Parvati stopped the poison in Lord's throat and it is believed that his throat turned to blue.

As a result of this, Lord Shiva came to be known as **Thiruneelagandan** (the one with Blue Throat).

It is said that on the Trayodhasi (thirteenth moon day) day, the gods and demons realized that they had committed a sin of not praying the God and prayed for forgiveness. Lord Shiva Shankar forgave them and danced in between the horns of the Nandhi's (Celestial Bull) forehead.

This time is called Pradhosham. It is believed that if anybody prays Lord Shiva in that time, he fulfills their wishes and *He* gives them mukthi.

# *Meaning of Lingashtakam*

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is worshipped by Brahma, Vishnu and other Devas,*
*Which is pure and resplendent,*
*And which destroys sorrows of birth.* [1]

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is worshipped by great sages and devas,*
*Which destroyed the god of love, Which showers mercy,*
*And which destroyed the pride of Ravana.* [2]

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is anointed by perfumes,*
*Which leads to growth of wisdom,*
*And which is worshipped by sages, devas and asuras* [3]

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is ornamented by gold and great jewels,*
*Which shines with the snake being with it,*
*And which destroyed the Yagna of Daksha.* [4]

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is adorned by sandal paste and saffron,*
*Which wears the garland of lotus flowers,*
*And which can destroy accumulated sins.* [5]

# Lingashtakam

Brahma Murari surarchita Lingam
Nirmala bhasita sobhita Lingam
Janmaja dukha vinasaka Lingam
Tat pranamami Sadasiva Lingam [1]

Devamuni pravararchita Lingam
Kamadahana karunakara Lingam
Ravana darpa vinasaka Lingam
Tat pranamami Sadasiva Lingam [2]

Sarva sugandhi sulepita Lingam
Buddhi vivardhana karana Lingam
Siddha surasura vandita Lingam
Tat pranamami Sadasiva Lingam [3]

Kanaka maha mani bhushita Lingam
Paniphati veshtitha shobhita Lingam
Dakshasu yajna vinashana Lingam
Tat pranamami Sadasiva Lingam [4]

Kumkuma chandana lepita Lingam
Pankaja hara sushosbhita Lingam
Sanchita papa vinashana Lingam
Tat pranamami Sadasiva Lingam [5]

## *Meaning of Lingashtakam (Cont.)*

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is served by gods and other beings,*
*Which is the doorway for devotion and good thought,*
*And which shines like billions of Suns.* [6]

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is surrounded by eight petals,*
*Which is the prime reason of all riches,*
*And which destroys eight types of poverty.* [7]

*I bow before that Lingam, which is the eternal Shiva,*
*Which is worshipped by the teacher of gods,*
*Which is worshipped by the best of gods,*
*Which is always worshipped by the flowers,*
*From the garden of Gods,*
*Which is the eternal abode and ultimate truth.* [8]

*Any one who chants the holy octet of the Lingam,*
*In the holy presence of Lord Shiva,*
*Would in the end reach the world of Shiva, ,*
*And keep him company.*

*Sivaya Nama Om Sivaya Namaha*
*Sivaya Nama Om Nama Shivaya*
*Siva Siva Siva Siva Sivaya Nama Om*
*Hara Hara Hara Hara Nama Shivaya*

# Lingashtakam (Cont.)

Devaganarchita sevita Lingam
Bhavair bhaktibhi revacha Lingam
Dinakarakoti prabhakara Lingam
Tat pranamami Sadasiva Lingam [6]

Ashtadalo pariveshtia Lingam
Sarva samudbhava karana Lingam
Ashtadaridra vinashana Lingam
Tatpranamami Sadashiva Lingam [7]

Suraguru suravara pujita Lingam
Suravana pushpa sadarchita Lingam
Paratparam paramatmaka Lingam
Tatpranamami Sadashiva Lingam [8]

Lingashtakamidam punyam
Yat Pathet Shivasannidhau
Shivalokamavapnoti
Shivena saha modate.

Sivaya Nama Om Sivaya Namaha
Sivaya Nama Om Nama Shivaya
Siva Siva Siva Siva Sivaya Nama Om
Hara Hara Hara Hara Nama Shivaya.



## Nanthithevar Thuthi

Nanthiem Perumaanthannai NaaLthooRum VaLipaddaal
Punthiyil Jnaanam Serum Pukazhkalvi Theadivarum
Ivvulaka Inpam Yaavum Ivaradi Thozha UNdu!
Avvulaka AruLumkuuda Avarthuthi Paada UNdu!
MutpiRavi VinaikaLyaavum Theeyidda MeLukaakum
Nanthiyin Paarvai Pada NalankaLudan Kiddum!
Eesanukku Ethir Amarnthu IRaiuunjal Aaddivikkum
Nantheesar Natpaatham Naam ThoLuvoomae!

## NALAM SERKKUM NANTHEESWARAR

Sivanarai Enraikkum Sumakkum Nanthi
Sevitha PaktharkaLai Kaakkum Nanthi
KavalaikaLai EnnaaLum Pookkum Nanthi
Kailaiyile Nadampuriyum Kanintha Nanthi

PalliyaRaip Pakkaththil Irukkum Nanthi
Parvathiyin Solkedduch Chirikkum Nanthi
Nallathoru Rakasiyaththai Kaakkum Nanthi
NaaLthooRum ThaNNeeril KuLikkum Nanthi

Senkarumbu Unavu Maalai ANiyum Nanthi
Sivanukke URuthuNaiyaai ViLankum Nanthi
Mangalangal Anaiththaiyum Kodukkum Nanthi
ManitharkaLin Thuyar Pokka Vantha Nanthi

Arukampul Maalaiyaiyum ANiyum Nanthi
Ariyathoru Vilvame Etta Nanthi
Varum Kaalam Nalamaaka Vaikkum Nanthi
VaNangkukiRom Emaikkaakka Varuka Nanthi

Pirathosha Kaalaththil Pesum Nanthi
PeraruLai Mantharukku VaLankum Nanthi
Varalaru Padaithu Varum Valla Nanthi
VaRumaiyinai EnnaaLum Akattum Nanthi

Keddakana Aththanaiyum Maattum Nanthi
Kirthiyudan Kulam Kakkum Iniya Nanthi
Vettivarum Vaippalikka Uthavum Nanthi
Vithiyinaithan Maativida ViLaiyum Nanthi

Venthan Nakar Seiyinile KuLikkum Nanthi
Viyakka Vaikkum Thanchaavur Periya Nanthi
Serntha Thiruppunkurile Saintha Nanthi
Sevi Saiththu AruL Kodukkum Selva Nanthi

Kumbidda Pakthar Thuyar Neekkum Nanthi
Kudam Kudamai Abhishekam Partha Nanthi
Pon PruLai VaLankidave Vantha Nanthi
PukaLvikka Em Illam Varuka Nanthi

# Nalamtharum Nanthi

**Kanthanin** Thanthaiyai thaan
    Kavanamaaich Sumanthu Selvaai
Nanthanaar VaNangkuthaRku
    Nadaiyinil Vilaki NinRaai
Anthamaai Aathiyaaki
    Akilaththai Kaakka Vanthaai
Nanthiyea Unaithuthiththean
    Naadi Vanthemmai Kaappaai
Onpathu KoolkaLukkum
    Uyariya Palan Koduppaai
Pon PoruL Kuviya Vaippaai
    PukaLaiyum VaLarththu Vaippaai

**Sinthanai** VaLangkoduppai
    Sikarathil Thookki Vaippaai
Nanthiye Unaithuthiththean
    Naadivanthemmai Kaappaai
MaalaikaL Eatka Vaippaai
    MaLalaikaL Pirakkakka Vaippaai
VelaikaL Kidaikka Vaippaai
    Vithiyaiyum Maatti Vaippaai

**Solaiyin** VaNNappuuvai
    Suudidum Nanthi Theva
NaLum Naan Unai Thuthithean
    Naadi Vanthemmai Kaappai
Thanjaiyil Periya Nanthi
    ThaLirudal VeNNai Saaththi
Anjaatha Venthan Nanthi
    ALakiya Nekamam Nanthi
Kunjara Mukaththaan Thanthai
    Kunthidum Rishapa Nanthi
Thanjamaam Unaiyadainthean
    Thayankaathu Emmai Kaappaai

# SIVAPURANAM

**Thollai IRum Piravi SooLum ThaLai Neekki**
**Allal Aruththu Aanantham Aakiyathea – Ellai**
**Maruvaa Neri YaLikkum Vaathavoor Engkoon**
**Thiru Vaasakam Ennum Theaen**

NamaccivAya vAazhga NAdhan thAL vAzhga
imaippozhudhum en nenjjil nInggAdhAn thAL vAzhga
kOgazhi ANda kurumaNidhan thAL vAzhga
Agamam Agi nindRu aNNippAn thAL vAzhga
Egan anEgan iRaivan adivAzhga

vEgam keduththANda vEndhan adi velga
piRappaRukkum pinjnjaganthan peygazhalgaL velga
puRa ndhArkkuc cEyOnthan pUnggazhalgaL velga
karangguvivAr uLmagizhum kOngazhalgaL velga
sirangguvivAr Ongguvikkum sIrOn kazhal velga

Isan adi pOtRi endhai adi pOtRi
thEsan adi pOtRi sivan sEvadi pOtRi
nEyaththE nindRa nimalan adi pOtRi
mAyap piRappu aRukkum mannan adi pOtRi
sIrAr perundhuRai nam thEvan adi pOtRi

ArAdha inbam aruLum malai pOtRi
sivan avan en sindhaiyuL nindRa adhanAl
avan aruLAlE avan thAL vaNanggic
cindhai magizhac civapurANam thannai
mundhai vinaimuzhudhum Oya uraippan yAn.

kaN nudhalAnthan karuNaik kaNgAtta vandhu eydhi
eNNudhaRku ettA ezhilAr kazhal iRainjji
viN niRaindhum maN niRaindhum mikkAy, viLanggu oLiyAy,
eN iRandhu ellai ilAdhAnE nin perunjjIr
pollA vinaiyEn pugazhumARu ondRu aRiyEn

pullAgip pUdAyp puzhuvAy maramAgip
pal virugamAgip paRavaiyAyp pAmbAgik
kallAy manidharAyp pEyAyk kaNa~nggaLAy
val asurar Agi munivarAyth thEvarAyc
cellAa nindRa ith thAvara sanggamaththuL

ellAp piRappum piRandhu iLaiththEn, emberumAn
meyyE un pon adigaL kaNdu indRu vIdu utREn
uyya en uLLaththuL OnggAramAy nindRa
meyyA vimalA vidaippAgA vEdhanggaL
aiyA ena Onggi Azhndhu agandRa nuNNiyanE

veyyAy, thaNiyAy, iyamAnanAm vimalA
poy Ayina ellAm pOy agala vandharuLi
mey njAnam Agi miLirgindRa meyc cudarE
enjnjAnam illAdhEn inbap perumAnE
anjnjAnam thannai agalvikkum nal aRivE

Akkam aLavu iRudhi illAy, anaiththu ulagum
AkkuvAy kAppAy azhippAy aruL tharuvAy
pOkkuvAy ennaip puguvippAy nin thozhumbin
nAtRaththin nEriyAy, sEyAy, naNiyAnE
mAtRam manam kazhiya nindRa maRaiyOnE

kaRandha pAl kannalodu ney kalandhAR pOlac
ciRandha adiyAr sindhanaiyuL thEnURi nindRu
piRandha piRappu aRukkum enggaL perumAn
niRanggaL Or aindhu udaiyAy, viNNOrgaL Eththa
maRaindhirundhAy, emberumAn valvinaiyEn thannai

maRaindhida mUdiya mAya iruLai
aRam pAvam ennum arunggayitRAl katti
puRam thOl pOrththu enggum puzhu azhukku mUdi,
malam sOrum onbadhu vAyil kudilai
malanggap pulan aindhum vanjjanaiyaic ceyya,

vilanggu manaththAl, vimalA unakku
kalandha anbAgik kasi~ndhu uL urugum
nalam thAn ilAdha siRiyERku nalgi
nilam thanmEl vandhu aruLi nILkazhalgaL kAtti,
nAyiR kadaiyAyk kidandha adiyERkuth

thAyiR ciRandha thayA Ana thaththuvanE
mAsatRa sOdhi malarndha malarccudarE
thEsanE thEnAr amudhE sivaburAnE
pAsamAm patRu aRuththup pArikkum AriyanE
nEsa aruLpuri~ndhu nenjjil vanjjam kedap

pErAdhu nindRa perunggaruNaip pErARE
ArA amudhE aLavilAp pemmAnE
OrAdhAr uLLaththu oLikkum oLiyAnE
nIrAy urukki en AruyirAy nindRAnE
inbamum thunbamum illAnE uLLAnE

anbarukku anbanE yAvaiyumAy illaiyumAy
sOdhiyanE thunniruLE thOndRAp perumaiyanE
AdhiyanE andham naduvAgi allAnE
Irththu ennai AtkoNda endhai perumAnE
kUrththa mey njAnaththAl koNdu uNarvAr thamkaruththil

nOkkariya nOkkE nuNukkariya nuN uNarvE
pOkkum varavum puNarvum ilAp puNNiyanE
kAkkum em kAvalanE kANbariya pEr oLiyE
AtRinba veLLamE aththA mikkAy nindRa
thOtRac cudar oLiyAy sollAdha nuN uNarvAy

mAtRamAm vaiyagaththin vevvERE va~ndhu aRivAm
thEtRanE thEtRath theLivE en sindhanai uL
UtRAna uNNAr amudhE udaiyAnE
vEtRu vigAra vidakku udambin uL kidappa
AtREn em aiyA aranE O endRu endRu

pOtRip pugazhndhirundhu poygettu mey AnAr
mIttu inggu va~ndhu vinaippiRavi sArAmE
kaLLap pulak kurambaik kattu azhikka vallAnE
naL iruLil nattam payindRu Adum nAdhanE
thillai uL kUththanE thenbANdi nAttAnE

allal piRavi aRuppAnE O endRu
sollaRku ariyAnaic collith thiruvadikkIzh
solliya pAttin poruL uNarndhu solluvAr
selvar sivaburaththin uLLAr sivan adikkIzhp
pallOrum Eththap paNindhu.

**Thollai Irum Piravi SooLum ThaLai Neekki**
**Allal Aruththu Aanantham Aakiyathea – Ellai**
**Maruvaa Neri YaLikkum Vaathavoor Engkoon**
**Thiru Vaasakam Ennum Theaen**

**ThiruchcitRampalam**

Compiled & formatted by:
Selliah Theivasihamany

# Pradosha Vrata

## By Sri Swami Sivananda

ALL THINGS in this vast creation function upon definite cosmic laws or laws of God. There is always a beautiful system and sound rationale governing every phenomenon and process, mundane or mystical. Just as the gross elements and physical forces operate differently under different states and conditions, so also the subtler and higher forces respond and react in the inner mystic planes, and in the purely spiritual processes like meditation, prayer, worship, etc.

Therefore, you will find definite injunctions for performing certain types of worship in the morning, certain other injunctions for the midday prayers, and still others for the evening worship. Again, some observances are meant to be performed during certain phases of the moon, some when a particular star is in the ascendant, or at the time of a particular conjunction of planets.

The Pradosha worship is to be done in the evening twilight on the thirteenth day of each lunar fortnight. It is the worship of Lord Siva for victory and success in all undertakings, and the fulfilment of all your heart's cherished desires. When you desire to obtain a favour from a superior person, don't you naturally approach him at a moment when he is likely to be in a very pleasant frame of mind? You will perhaps see him after he has had a good dinner and is happily chatting with a friend in a hearty, expansive mood.

Even so, the Hindu, especially the Hindu who is engaged in the motivated type of worship, usually selects the most pleasant aspect of God for his worship. He performs it at a time which the ancient Rishis experienced as being the most helpful and efficacious in propitiating the Deity. The Pradosha worship is based on such mystic psychology.

# OTTAWA SIVAN TEMPLE
# ஒட்டாவா சிவன் கோயில்



**2104 Roger Stevens Drive, North Gower, Ontario, K0A 2T0, Canada.**

**www.ottawasivantemple.com**

**613-489-1774**